**IN THE COURT OF THE PRESIDING OFFICER,LABOUR COURT, SALEM**

**C.P.No.30/2018**

**Deposition of PW.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சாமிநாதன் | Husband / Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Age | : | Calling | : |

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Tmt. N. Mani, Deputy Nazir, Bench Clerk (i/c) of this court on 05.01.2021 in accordance with Provisions X of Evidence Act 1872.

**குறுக்கு விசாரணை:**

நான் எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில் இறுதியாக, போக்குவரத்து ஆய்வாளராக பணியிலிருந்து கடந்த 31.01.2017 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். நான் சம்பள பாக்கி கோரியும், ஈட்டிய விடுப்பு சம்பளம் கோரியும், IRTT பங்கு தொகை கோரியும், தொழிலாளர் நலநிதி கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2013 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் ஏற்பட்ட ஊதிய ஒப்பந்தப்படி என்னுடைய தர ஊதியம் ரூ.2400/- என்றால் சரியல்ல, ரூ.4300/- ஆகும். பயணச்சீட்டு பரிசோதகராக இருக்கும்போது என்னுடைய தர ஊதியம் ரூ.4300/- ஆகும். 31.08.2013 ல், நான் பயணச்சீட்டு பரிசோதகராக பணியில் இருந்தேன். 01.01.2017 ஆம் தேதியில்தான் நான் போக்குவரத்து ஆய்வாளராக பதவி உயர்வு பெற்றேன் என்றால் சரி. நான் போக்குவரத்து ஆய்வாளராக பதவி உயர்வு பெற்ற பிறகுதான் என்னுடைய தர ஊதியம் ரூ.4400/- என்றால் சரிதான். நான் பதவி உயர்வு பெற்ற தேதி முதல் பணி ஓய்வு பெற்ற தேதி வரை அனைத்து சம்பள பாக்கிகளையும் நிர்வாகம் எனக்கு வழங்கிவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு IRTT பங்கு தொகையினை நிர்வாகம் வழங்கவேண்டும் என்று நிர்வாகத்திடம் விண்ணப்பம் செய்துள்ளேன். அந்த தொகையினை நிர்வாகம்

எனக்கு வழங்கவில்லை. எனக்கு தொழிலாளர் நலநிதியாக ரூ.90,442/- வழங்கப்பட வேண்டும் என்றால் சரி. அந்த தொகையினையும் நிர்வாகம் எனக்கு வழங்கவில்லை. நான் பணி ஓய்வு பெறும்போது, என்னுடைய ஈட்டிய விடுப்பு 117.5 நாட்கள் என்றால் சரிதான். அந்த 117.5 நாட்களுக்குண்டான ஈட்டிய விடுப்பு சம்பளம் ரூ.1,82,752/- என்றால் சரியல்ல. நிர்வாகம் தாக்கல் செய்துள்ள பதிலுரையில், ஈட்டிய விடுப்பிற்கான கணக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் கணக்கீடு தவறாக உள்ளது. அந்த கணக்கீடு தவறாக உள்ளது என்று ஆட்சேபனை செய்து Rejoinder மனு தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. நான் ஈட்டிய விடுப்பு சம்பளமாக ரூ.1,82,752/- பெற்றுக்கொண்டேன், ஆனால் தவணை முறையில் கொடுத்தார்கள். எனக்கு நிர்வாகத்தால் வழங்கப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.94,802/- என்றால் சரியல்ல. நிர்வாகம் ஒப்புக்கொண்ட தொகைகளை தவிர, இதர தொகைகளை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :- இல்லை

Sd/- T. Munusamy.
Presiding Officer,
Labour Court, Salem.